ET/SSS/2022(2023)/OL/22/T/Q/S-1

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ | 2022 (2023)

# Student Seminar Series

# ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව

Practice Paper | උපකාරක ප්‍රශ්න පත්‍ර

# Tamil Language & Literature

# தமிழ் மொழியும் இலக்கியமும்



**Question Paper - I,II,III** | வினாப்பத்திரம் - I,II,III (மொழிமூலம்-தமிழ்)

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு

දූරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி அமைச்சு**
**Ministry of Education, Sri Lanka**

| 22 | T | I, II |
|---|---|---|

**අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)**
**G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | I, II |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | I, II |
| **Tamil Language and Literature** | I, II |

*පැය තුනයි.*
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

| | |
|---|---|
| අමතර කියවීම් කාලය | - මිනිත්තු 10 යි. |
| மேலதிக வாசிப்பு நேரம் | - 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | – 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்துஇ வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக** வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. “ கொங்கர்க் கமராபதி யளித்த..” இங்கு **அமராபதி** என்பதன் பொருள்,
1) தலைநகரம் 2) சுவர்க்கம் 3) நரகம் 4) அரண்மனை

02. “ ஞாலம் எல்லாம் பூத்தோனே பூந்தவிசில் பூவை..” என்பதில் **பூந்தவிசு** என்பதன் பொருள்,
1) பூமாலை 2) இருக்கை 3) ஊஞ்சல் 4) மலராசனம்

03. ‘‘ இந்தக் கதிதான் எனக்கும்..” இங்கு **கதி** என்பதன் எதிர்ப்பதம்
1) மோட்சம் 2) நிர்க்கதி 3) பரகதி 4) கடுகதி

04. தொலைவில் தாலாட்டுப் பாடல் ஒலிக்கிறது. இங்கு **தொலைவு** என்பதன் எதிர்க்கருத்து,
1) மறைவில் 2) விலத்தி 3) சேய்மை 4) அருகில்

05. “சீனத்துச் செப்பே என்ர சிங்காரப் பூ நிலவே..” இங்கு **சிங்காரம்** எனப்படுவது,
1) சிரிப்பு 2) அழகு 3) நயனம் 4) செல்வம்

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. பொருத்தமற்ற சொற்களின் இணைவு,
1) அறிஞர் - அவை 2) படைவீரர் - அணி
3) மக்கள் - தொகுதி 4) குண்டர் - குழு

07. ‘காதலிக்கு இன்னொருவரிடத்தில் மையல் ஏற்படுகின்றது.’
‘‘மையல் ஒருவன் களித்தற்றாற்...’’ இங்கு, **மையல்** எனும் சொல் குறிக்கும் பொருள் முறையே,
1) விருப்பம், பைத்தியம் 2) பிரேதம், மையம்
3) நிலைக்கொள்ளல், மயக்கம் 4) பயம், பேதை

08. ஆபரணம், வலிமை, அழகு என்பன குறிக்கும் பொருள்,
1) மஞ்சு 2) நகை 3) சக்தி 4) கவின்

09. ‘இன்ரவியூ’ (Interview) என்பதன் தமிழ் வடிவம்,
1) எதிர்கொள்ளல் 2) வர்ணனை 3) நேர்காணல் 4) காட்சி

10. கருவாடு அடுக்கப்பட்டிருப்பது,
1) போர் 2) சிப்பம் 3) பாடம் 4) கட்டு

11. ‘‘மார்தட்டிய பஞ்சகாலத்திலே..’’ இங்கு ‘மார்தட்டிய’ என்ற மரபுத்தொடர் தரும் கருத்து,
1) பெருமை கொள்ளல் 2) நம்பிக்கையூட்டுதல்
3) சூளுரைத்தல் 4) சபதம் இடுதல்

12. ஐயம் திரிபறக் கற்றல் என்ற பொருள் தரும் மரபுத்தொடர்,
1) துறைபோதல் 2) நுனிப்புல் மேய்தல் 3) துணைபோதல் 4) ஆழம் பார்த்தல்

13. தமக்கென வாழா தகைமையுடையோர் என்ற அருஞ்சொற்றொடர் குறிக்கும் கருத்து,
1) உறவினர் நலம் பேணுதல் 2) தனக்காக வாழ்தல்
3) பிறர்நலம் கருதுதல் 4) சுயநலத்தோடு வாழ்தல்

14. புராணக்கதைகளை சுவைபட பிரசங்கம் செய்வோன்,
1) பிரசங்கி 2) சிரஞ்சீவி 3) விகடகவி 4) பௌராணிகன்

15. பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்,
1) சுயவரம் 2) இராக்கதம் 3) காந்தர்வம் 4) திருமணம்

16. ‘‘அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்’’ என்ற பழமொழி தரும் கருத்து,
1) அச்சமே அம்பலம் ஏறும். 2) பயம் புகழைத் தரும்.
3) பயம் ஆபத்தைத் தரும். 4) துணிவே துணை.

17. வீணானவன் யார் பேச்சும் கேட்கமாட்டான் எனும் பொருளைத் தரும் பழமொழி,
1) ஊரோடு ஒத்து வாழ் 2) கெடுகுடி சொல் கேட்காது
3) யதார்த்தவாதி வெகுசன விரோதி 4) கழுதை அறியுமா கற்பூர வாசனை

18. ‘‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி’’ என்ற பொருளுக்கு நிகரான உவமைத்தொடர்,
1) வண்ணத்துப்பூச்சி பறப்பது போல 2) புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல
3) நல்லபாம்பை உசுப்பி விட்டது போல 4) மீன்குஞ்சு நீந்துவது போல

19. குரலை ஏற்றி இறக்கிப் பேசாமல் கத்திப் பேசுவார்கள். இங்கு **ஏற்றி இறக்கி** என்பது,
1) அடுக்குத்தொடர் 2) இரட்டைக்கிளவி 3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

20. கத்தும் எனும் தொனி மரபுக்குள் அடங்காதது,
1) கழுதை 2) கரடி 3) எருது 4) தவளை

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. ககரம் ‘g’ என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்,
    1) தாகம் 2) மங்கை 3) மேகம் 4) கடல்

22. பின்வருவனவற்றுள் எதிர்மறை இடைநிலை பெற்றமைந்த சொல்,
    1) ஓதுவான் 2) செய்வான் 3) பொன்னன் 4) நடவான்

23. பெரியன் என்பது,
    1) தெரிநிலைவினைப் பகுபதம் 2) குறிப்புவினைப் பகுபதம்
    3) பண்புப்பெயர்ப் பகுபதம் 4) தொழிற்பெயர்ப் பகுபதம்

24. மிக அடர்த்தியாய் இருந்தது. இங்கு **மிக அடர்த்தியாய்** என்பது,
    1) வினையெச்சத்தொடர் 2) வினையடைத்தொடர்
    3) பெயர்த்தொடர் 4) பெயரடைத்தொடர்

25. பின்வருவனவற்றுள் தோன்றல் புணர்ச்சியாக அமைவது,
    1) கல்லால் 2) தேனருவி 3) சிறகால் 4) கற்சிலை

26. ‘‘கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்.’’ - இது,
    1) தன்மை பன்மை வினைமுற்று 2) முன்னிலை வினைமுற்று
    3) ஏவல் வினைமுற்று 4) படர்க்கை வினைமுற்று

27. ‘‘உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது’’ என்பதில் **உள்ளக்கமலம்** என்பது எவ்வகை அணி,
    1) சிலேடையணி 2) உவமையணி 3) உருவக அணி 4) தற்குறிப்பேற்றம்

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற் கூட்டம்,
    1) சங்கு, தம்பி, பட்டம், படகு 2) ஞாலம், ஞிமிறு, மன்னன், மண்டபம்
    3) ஆக்கம், இடும்பை, உதடு, ஓதல் 4) கயம், கராம்பு, கலப்பை, கவலை

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) முற்றுவினை :- உண்டான், படித்தான், ஓடியது
    2) எச்சவினை :- படித்த, ஓடி, எழுந்த
    3) தன்வினை :- கட்டினாள், கொடுத்தாள், உருட்டினாள்
    4) பிறவினை :- கட்டுவித்தான், கொடுப்பித்தான், ஊட்டினான்

30. 1) ஆக்கப்பெயர் :- முயற்சி, பெண்ணியம், கல்வி
    2) கூட்டுப்பெயர் :- கடலலை, எழுதுகோல், வானொலி
    3) தொழிற்பெயர் :- நடந்தான், ஆடுதல், பாடுதல்
    4) வினையாலணையும் பெயர் :- விழுந்தவன், பறந்தவை, அழுவானை

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை கட்டுப்படுத்த .................... அரசால் கொண்டுவரப்பட்டது.
    1) தனியாள் சட்டம் 2) பாதுகாப்புச்சட்டம் 3) விடுதலைச்சட்டம் 4) அவசரகாலச்சட்டம்

32. நாட்டின் தேசிய கலைஞர்களை கௌரவிக்கும் நோக்கோடு அரசினால் ................... விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
    1) நன்னெறி 2) தேசாபிமானி 3) கலாபூஷணம் 4) குரு பிரதீபா

33. பாடசாலைக்கு புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான …………. விழா இடம்பெற்றது.
    1) கால்கோள் 2) தொடக்கவிழா 3) அங்குரார்ப்பணம் 4) ஜெயந்தி விழா

34. உரம் இல்லாததால் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகளுக்கு அரசால் ……………… வழங்கப்பட்டது.
1) நிவாரணம் 2) மானியம் 3) உறுதி 4) காப்புறுதி

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. எல்லா இலட்சியங்களும் எல்லாரிடத்தும் ஒருங்கே ……………………………………
1) அமைவதில்லை 2) அமையாது
3) அமையா 4) அமைவனவல்ல

36. இந்த இருவர் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்கு போட்டியிட்டு ………………
1) கொண்டிருந்தார் 2) கொண்டிருப்பார்கள்
3) கொண்டிருக்கின்றார்கள் 4) கொண்டிருப்பார்

- **பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு 37 - 39 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

மாலை வருணனை மாலைப்போ தாதலுமே, மன்னன் சேனை
வழியிடையோர் பூம்பொழிலினமர்ந்த காலை,
சேலைப்போல் விழியாளைப் பார்த்தன் கொண்டு
சென்றாங்கோர் தனியிடத்தே பசும்புல் மேட்டில்
மேலைப்போம் பாதியினைத் தொழுது கண்டான்:
மெல்லியலு மவன்றொடைமேல் மெல்லச் சாய்ந்து
பாலைப்போல் மொழி பிதற்ற வவளை நோக்கிப்
பார்த்தனுமப் பாறயெழில் விளக்கு கின்றான்.

37. இப்பாடல் விபரிக்கும் பொழுது யாது?
1) மாலைப்பொழுது 2) இரவுப்பொழுது 3) காலைப்பொழுது 4) மதியப்பொழுது

38. ‘‘பாலைப்போல் மொழிபிதற்ற வவளை..’’ என்னும் வரியில் பயின்றுள்ள அணி,
1) தற்குறிப்பேற்றம் 2) சிலேடையணி 3) உருவகம் 4) உவமைஅணி

39. இங்கு பகலவனை சுட்டும் சொல்லாக இடம்பெறுவது,
1) பாலை 2) மன்னன் 3) பரிதி 4) பூம்பொழில்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

அ) இது போன்ற பல்வேறு உரைகளிலும் விமர்சனத்திற்கான கூறுகளைக் காணலாம்.
ஆ) பழைய இலக்கியங்களுக்கான உரைகள் மரபு ரீதியான விமர்சனத்திற்கு எடுத்துக்காட்டாகும்.
இ) திருக்குறளுக்கான பரிமேலழகரின் உரை இவ்வகையில் விதந்துரைக்கப்படுவதுண்டு.
ஈ) சில சந்தர்ப்பத்தில் விமர்சனத்தின் அவசியக் கூறான மதிப்பீடு செய்தல் வெளிப்படுவதுமுண்டு.
உ) ஆயினும், மரபுரைகள் ஆக்கங்களுக்கு விளக்கவுரை கூறும் நோக்கம் கொண்டன.

1) இ, ஆ, உ, ஈ, அ 2) ஆ, உ, இ, ஈ, அ
3) ஆ, இ, அ, உ, ஈ 4) ஆ, ஈ, அ, உ, இ

*****

අධ්‍යාපන අමාත්‍යාංශය
**கல்வி அமைச்சு**
**Ministry of Education, Sri Lanka**

| 22 | T | II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | II |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | II |
| **Tamil Language and Literature** | **II** |

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**

**கவனிக்க:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் சந்திப் பிரித்து எழுதுக.
   நாத ராரிய நாடெங்கள்
2. ஏன் மோனே, நீ உன்ர மச்சாளிடம் பேசிறாயில்லையாம்? இப்பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
3. ‘இதயப் பேழையிலே இலங்கும் நினைப்பால் அவள் அல்லலுற்றாள்’. இங்கு பயின்றுள்ள அணி யாது?
4. வெளிநாட்டு வாழ்க்கை என்பது நமக்குள் அதிருப்தியை ஏற்படுத்தக் கூடியது.
   இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலையினை எடுத்துக் காட்டுக.
5. அங்கு வந்திருந்தவர்களுக்கு தலைக்கு ஒரு பழம் என வழங்கப்பட்டது. இதில் காணப்படும் ஆகுபெயரை இனங்கண்டு, அது எவ்வகை ஆகுபெயர் எனக் குறிப்பிடுக.
6. அகராதிகளில் கொடுக்கப்பட்டுள்ள இலட்சணங்களும் ஒவ்வொரு வகையில் பிழைப்பாடு உடையதாயிருந்தன. இவ்வாக்கியத்தை வழுநீக்கி எழுதுக.
7. ‘அவன் கூறியதை நினைவில் வைத்திருக்கின்றேன்.’ இதில் ‘இல்’ உருபு ஏற்றுள்ள வேற்றுமைப் பொருள் யாது?
8. ‘வெடித்து சிரிக்கிறது என் பித்து மனம்’ எனும் வாக்கியத்தில் வரும் பெயரடை யாது?
9. எனது வீட்டருகே சாரைப்பாம்பு அங்குமிங்கும் ஊர்ந்து திரிந்தது. இதில் வந்துள்ள இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாது?
10. பின்வருவனவற்றில் சம்பவம் ஒன்றை எழுத்து வடிவில் விபரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு அம்சங்களைத் தெரிவுசெய்து எழுதுக.
    நியமமொழி, கூறியது கூறல், ஒழுங்குமுறைப்படி எழுதுதல், ஒருமைப்பாடு

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**02.** பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ **250 சொற்களில்** அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i). இலங்கை வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளுள் சுற்றுலாத்துறையும் ஒன்றாகும். உள்நாட்டு மக்களும், வெளிநாட்டவர்களும் சுற்றுலா மையங்களை நாடிச் செல்வதால் நம்நாட்டு கலாசார, வரலாற்று விடயங்கள் பரப்பப்படுவதோடு ஒரு சில மக்கள் அதிகமான வருமானத்தையும் பெற்றவர்களாகின்றனர். ஆனால், சுற்றுலா மையங்கள் பல் வேறுபட்ட காரணங்களால் பாதுகாக்கப்படாமையினால் சுற்றுலாத்துறையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பயன்கள் இழக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சுற்றுலாத் துறையைப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்ற பொருளிலமைந்த ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii). நாட்டில் அசாதாரண சூழ்நிலைகள் பல வகைகளிலும் ஏற்பட்டன. இவற்றின் போது எதிர்கால சந்ததியினரின் கல்வி பற்றிய கரிசனை அனைத்துத் தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது. அதற்குத் தீர்வாக இணைய வழியிலான கல்வி முறைமை மிகுதியான பயனைக் கொடுத்தது. கிராமத்து மாணவர்களும் நகர்ப்பிரதேச மாணவர்களும் பல்வேறு நன்மைகளை இச்சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்டனர் எனக் கருதும் ஒருவருக்கும், இணையவழி மூலம் கல்வியைப் பெறமுடியவில்லை எனக் கருதும் இன்னொருவருக்குமிடையிலான ஒரு **உரையாடல்.**

(iii). ஒரு காட்டில் வாழுகின்ற பழங்குடி மக்களுடன் நிகழ்ந்த எதிர்பாராத சந்திப்பின் போது நீர் கண்டவை, உமக்கு ஏற்பட்ட அனுபவங்கள், அம்மக்களோடு பேசிப்பழகிய அனுபவங்கள் உமது நாட்டின் சிறப்பம்சங்களில் ஒன்றாக அமைந்திருக்கின்றது. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதற்கான ஒரு **விவரணக்கட்டுரை.**

(iv). பாடசாலைக் கல்வி எல்லா பிள்ளைகளுக்கும் கட்டாயமானதாகும். சில சந்தர்ப்பங்களில் விசேட தேவையுடையோர் என்போர் சாதாரண பிள்ளைகளைக் காட்டிலும் விளையாட்டு, ஆக்கத்திறன், புத்தாக்கங்கள், பெறுபேறு என்பவற்றில் உயர்நிலையை வெளிப்படுத்துபவர்கள். இந்நிலையில், ஆரோஸ் என்பவன் விசேட தேவையுடையோனாக இருந்தும் சமூகத்தில் பலராலும் பேசப்படும் மாணவனாகவும் திகழ்ந்தான் என்ற பொருள்பட ஒரு **சிறுகதை** எழுதுக. **(25 புள்ளிகள்)**

**03.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, பண்பட்ட உயர் தனிச் செம்மொழியாய் இலக்கண இலக்கிய வளம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியின் ஆற்றலையும், சிறப்பினையும் வியந்து பாராட்டும் கால்டுவெல், இம்மொழியின் நாகரிக மேம்பாட்டு உச்ச நிலையில் உலகிற்கு அறிவூட்டும் பேரொலியாக விளங்கிய கிரேக்க மொழியுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். திராவிட மொழிகளுள் பெரும் பரப்புடைய மொழி தமிழ்மொழியே. நான்கு கோடி மக்கள் வாழுகின்ற தமிழ்நாட்டின் மொழியாக இருப்பதுடன் இலங்கை, பர்மா, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா மற்றும் பீஜீத் தீவுகள் முதலிய நாடுகளிலும் வாழும் மக்கள் தொன்றுதொட்டு பேசும் மொழியாகத் தமிழ்மொழி காணப்படுகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்தே தமிழ் மக்கள் உள்நாட்டு, பிறநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டு வந்தமையாலும் காலத்திற்குக் காலம் ஏனைய நாட்டுப் படையெடுப்புக்கள், ஆட்சி மாற்றங்களாலும் ஏனைய நாட்டு மொழிகள் தமிழ்மொழியுடன் கலக்கலாயின.

தமிழில் உலக மொழிகள் பலவற்றின் சொற்கள் கலந்துள்ளன. மனிதன் தான் தனித்து வாழ்வதில்லை. அவன் கூட்டமாக வாழத் தொடங்கியதும் சமுதாயம் தோன்றியது. அது போல நாகரிகம் வளர எந்த சமுதாயமும், நாடும் சமூகத்துடனும் பிறநாட்டுடனும் பல்வேறு காரணத்தோடு காலகாலமாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. இவற்றின் காரணத்தால் ஓர் மொழியிற் பிறமொழிச் சொற்கள் கலத்தல் தவிர்க்க முடியாததொன்றாகக் காணப்படுகின்றது. ஓர் மொழியின் பிறமொழிச் சொற்கள் அளவுடன் கலத்திருப்பது அம்மொழியின் வளர்ச்சிக்கு உதவும். உலகமயமாக்கல் இடம்பெறும் இச்சூழ்நிலையில் நம் மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலப்பது தவிர்க்கமுடியாததொன்றாகக் காணப்படுகின்றது. அண்மையில் இந்திய அரசினால் தமிழ்மொழி செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான வரலாற்றினைக் கொண்டு விளங்குகின்றது.

**(10 புள்ளிகள்)**

**04.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழில் குழந்தைப் பாடல்கள் குறித்து எழுதியிருப்போரில் பெரும்பாலானோர் இலக்கிய நயம் வாய்ந்த "செந்தமிழ்ப் பாக்களை மனங்கொண்டிருந்தனர் என்பது அவர் கட்டுரைகளைப் படிப்போர்க்குப் புலனாகும். குழந்தைப் பாடல்களுக்கும் நாட்டார் பாடல்களுக்கும் இருக்கக்கூடிய - இருக்கவேண்டிய - தொடர்பு குறித்து அவர்கள் சிந்தித்திருப்பதாகவும் தெரியவில்லை. எடுத்துக்காட்டாக "குழந்தை இலக்கியம்'' என்ற கட்டுரையில் கனக செந்திநாதன், "இலக்கியப் பாடல்கள், அபிநயப் பாடல்கள், கிராமியப் பாடல்கள்'' என்று பொதுப்படையாகக் கூறியுள்ளாரெனினும், அக்கட்டுரையிலே நாட்டுப் பாடல்களின் முக்கியத்துவத்தைச் சிறிதேனும் விவரிக்கவில்லை. பத்தொடு பதினொன்றாகவே "கிராமியப் பாடல்'' குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை தனிநபர் ஒருவருடைய குறைபாடாகவும் அறியாமையாகவும் நாம் கருத வேண்டியதில்லை. ஏனெனில், இன்றும் தமிழிலக்கிய இரசிகர்களிற் பலர் நாட்டுப் பாடல்களை உதாசீனம் செய்வது வெறுமனே ஓர் இலக்கியப் பிரச்சினை மட்டுமல்ல அது ஒரு சமூகவியற் பிரச்சினையுமாகும்.

பொதுவாக எல்லாச் சமுதாயங்களிலும் வழக்கிலுள்ள நாட்டுப் பாடல்களிலே கணிசமான பகுதி குழந்தைகள் சம்பந்தமானவையாகும். அவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு, புதிய புதிய ஆக்கங்களை பாடுவதற்கு ஏற்ற மனப்பக்குவம் வேண்டும். அதற்கு ஆசிரியர்கள் சமூகவியல் உடையோராய் இருத்தல் அவசியம். திரு.அழ.வள்ளியப்பா நாட்டுப் பாடல்களின் இன்றியமையாமையை வலியுறுத்தி வந்திருக்கிறார்.

1. நாட்டுப் பாடல்களை உதாசீனம் செய்வது எவ்வகை பிரச்சினைகளாக உருமாறுகின்றது?
2. செந்திநாதன் எவ்வகை பாடல்களுக்கு முக்கியத்துவத்தினை வழங்கவில்லை?
3. தமிழில் குழந்தைப் பாடல்கள் குறித்து எழுதியிருப்போரின் பெரும்பாலானோர் எதன்மேல் மனம் கொண்டிருந்தார்கள்?
4. புதிய புதிய ஆக்கங்களை செய்வதற்கு தேவையானவை எவை?
5. அனைத்து சமுதாயங்களிலும் வழக்கிலுள்ள நாட்டுப்பாடல்களிலே கணிசமான பகுதி எதனைப் பற்றியது?

**(10 புள்ளிகள்)**

**05.** நாவலூர்ப் பிரதேசத்தில் அவ்வப்போது ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தம், மக்களது உயிருக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றது. அத்துடன் கிராமப் போக்குவரத்தையும் பெரிதும் பாதித்துள்ளது. இதனை வலியுறுத்தி, கிராமத்தின் பொது அமைப்புகளின் செயலாளர் க.பரமலிங்கம் என உம்மைக் கருதிக்கொண்டு, மாவட்ட அரசாங்க அதிபர் திரு.அ.கருணாநிதி அவர்களுக்கு பின்வரும் விடயங்களை உள்ளடக்கி, 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

- மக்களின் உயிருக்கு ஏற்பட்ட அச்சம்
- இவ்வனர்த்தத்தால் கிராமத்தின் போக்குவரத்தில் காணப்படும் தடங்கல்கள்
- அவற்றை சீர் செய்வதற்குரிய வழிகள்.

**அல்லது**

சூழல் மனிதனோடு நெருங்கிய தொடர்பை உடையது. சூழலிலிருந்துதான் தொற்று நோய்கள் பரவுகின்றன. எமது நாட்டிலிருந்து டெங்கு நோய் முற்றாக அழிக்க முடியாதவொன்றாகக் காணப்படுகின்றது. சூழலைச் சுத்தம் செய்வது தொடர்பான மனப்பாங்கையும், டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வையும் மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக, வடலூர் பிரதேச சுகாதாரப் பிரிவினர் சார்பில் 100 சொற்களில் ஒரு விழிப்புணர்வு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- நோய் பரவுவதற்கான சூழல்
- நோயினால் ஏற்படும் பாதிப்புகள்
- நோயிலிருந்து பாதுகாப்பாக வாழ்வதற்கான வழிவகைகள்.

**(15 புள்ளிகள்)**

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 22 | T | III |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- உதவிக் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination - Support Seminar Series - 2022 (2023)

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III
தமிழ் மொழியும் இலக்கியமும் III
Tamil Language and Literature III

தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**

- ❋ அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❋ **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- ❋ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(i) ''எட்டுணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது''
(அ) ஆற்றல் என்பதன் பொருள் யாது?
(ஆ) எட்டுணை என்பதில் துணை என்பது எதனைக் குறிக்கின்றது?

(ii) ''பனிக்கூட்டம் விரட்டி வரும் பகலவனின் வீரம்''
(அ) இதில் பயின்றுள்ள அணியைத் தருக.
(ஆ) இவ்வரியில் வெளிப்படுத்தப்படும் பொழுது யாது?

(iii) ''பேசும் பேச்சால் கதைசொல்லும் வழக்கம் வேரூன்றி,
அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது''
(அ) 'வேரூன்றல்' என்றால் என்ன?
(ஆ) இங்கு குறிப்பிடப்படும் சினிமாவை சீரழிக்கும் பண்பு யாது?

(iv) ''வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்''
(அ) 'வீந்திடச் செய்தல்' என்பதால் நீர் கருதுவது யாது?
(ஆ) இப்பாடலிலுள்ள அணியினை விளக்குக.

(v) ''இறக்கை முளைத்து பறந்துவிட்டதா? பனி மூடிய அந்த அதிகாலையிலும்
நான் நண்பரைத் தேடிக் கொண்டு ஓடினேன்.''
(அ) இறக்கை முளைத்து பறந்ததாக குறிப்பிடப்படுவது எதனை?
(ஆ) இது யார் கூற்றாக அமைகின்றது?

(vi) ''தெய்வம் உணவே மாமரம் புட்பறை செய்தி யாழின் பகுதி ..''
(அ) மா, புள் என்பன எவற்றைக் குறிக்கின்றன?
(ஆ) இச்சூத்திரம் இடம்பெறும் இலக்கண நூல் யாது?

(vii) ''இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம் இதே போன்று இலக்கியங்களும்
அபின்னம்''
(அ) இவ்வுரைப்பகுதி இடம்பெறும் கட்டுரையை எழுதியவர் யார்?
(ஆ) அபின்னம் என்பதனை விளக்குக?

(viii) "பொருதொழிலும் கடைநிலத்தில் கிடந்ததே என
மொழிந்தான் புகழே பூண்பான்"

(அ) 'கடைநிலம்' என்பதால் குறிப்பிடப்படுவது யாது?

(ஆ) 'புகழே பூண்பான்' என்ற தொடர் யாரைக் குறிக்கின்றது?

(ix) "வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின்
பாலாடையோ.."

(அ) **ஆலிங்கனம் செய்தல்** என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள இயற்கை காட்சி எது?

(x) "மறையெனலறியா மாயமி லாயமொ
டுயர் சினை மருதத் துறையுறத் தாழ்ந்து"

(அ) 'மறையெனலறியா' என்பதன் கருத்து யாது?

(ஆ) 'துறை' என்பது எதனைக் குறிக்கின்றது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே

(அ) இப்பாடலில் வெளிப்படும் அறிவுடையோர் இயல்பு யாது?

(ஆ) புலவர் இதனை வெளிப்படுத்த கையாண்ட உதாரணத்தை தருக

(ii) செய்வரால் இனம் உகளும் திருநாடு
பெற நினைவோ சென்று மீளப்
பைவராய் அருங் கானில் பயின்று திரிதர
நினைவோ பகைத்த போரில்
உய்வர் ஆர் என விரைவின் உருத்து எழுந்து
பொர நினைவோ உண்மையாக
ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்

(அ) குருநாட்டின் சிறப்பைத் தருக.

(ஆ) கண்ணனின் எதிர்பார்ப்புகளைக் குறிப்பிடுக

(iii) பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே
மேழி பெருகவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே
நல்லமழை பெய்யவேணும் தம்பிரானே
ஏர் தழைக்கவேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே

(அ) இங்கு வெளிப்படும் உழவர்களின் வாழ்வியல் அம்சங்களைத் தருக?

(ஆ) உழவர்களின் பொதுநலச் சிந்தனை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(iv) அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள்? வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள், நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது. பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக்கொண்டு போய் வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது. விசுவநாதபிள்ளையும் நிலை தளர்ந்து போனார். அவருடைய பார்வை நாவலர் அவர்கள் முகத்தில் விழுந்தது. சனங்களும் அங்கேதான் பார்க்கிறார்கள்.

(அ) இவ்வுரைப்பகுதிக்குள் கையாளப்பட்டுள்ள அணியை எடுத்துக்காட்டுக?

(ஆ) நாவலரின் காசம் வாதமகா சபையின் உச்சத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை?

(v) ''ஏன்கா ஒரு மாதிரியாய் இருக்காய்?'' ''காய்ச்சல் மனெ நீ கடக்கி ஓடிப்போய் ஊறல் பக்கட் வாங்கி வா'' சேலை முடிச்சை அவிழ்த்து காசை நீட்டினா. ஊறல் குடித்துவிட்டு இழுத்துப் போர்த்தி படுத்துக்கொண்டா. இளவரசனான நான் உடைந்து போனேன். இன்றுதான் நோயென்று பாயில் சுருண்டிருப்பதைப் பார்க்கிறேன். இனந்தெரியாத அச்சம் என்னைக் கவ்விக் கொண்டது. மூத்தவாப்பா குளிர் காய தீ மூட்டினார். என் வெள்ளை கொக்கு வெடவெடுத்தது. சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார். அன்னாவி மாமா வந்து ஓதிப்பார்த்தார். ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி உச்சவடகல்லு அவுலியாவுக்கு நேர்ந்துவைத்தார்.

(அ) மூத்தவாப்பா மூத்தம்மா மீது கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(ஆ) இங்கு வெளிப்படும் இறை நம்பிக்கைகளைத் தருக.

**(4 X 5 = 20 புள்ளிகள்)**

3. **எது நல்ல சினிமா** கட்டுரையில்,
(அ) சினிமா சீரழியும் வழிகள்
(ஆ) சினிமாவை வளப்படுத்தும் முறைகள்
என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை தருக.

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்,
(அ) தரும புத்திரன்
(ஆ) அருச்சுணன்
ஆகியோரது இலட்சிய வாழ்வு வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையினை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

4. **குகப்படலத்தில்,**
(அ) பரதன் குகனுக்குக் கைகேயியை அறிமுகம் செய்தலும்
(ஆ) கோசலையின் உயர்ந்த மனப்பாங்கும்
வெளிப்படுத்தப்படும் வகையினை குறிப்பிடுக.

**அல்லது**

**திருக்குறள்** பேதைமை அதிகாரத்தில்,
(அ) பேதைக்குரிய குணம்
(ஆ) பேதை இழிவுப்படுத்தப்பட்ட முறை
புலப்படுமாற்றை தெளிவுறுத்துக.

**(15 புள்ளிகள்)**

**5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **தத்தைவிடு தூது** என்ற இலக்கியத்தில்,

(அ) பெண்களிடத்தே தலைவன் விரும்பும் மாற்றங்களும்

(ஆ) தலைவியை வர்ணிக்கும் விதமும்

வெளிப்படுத்தப்படுமாற்றை விபரிக்குக.

6. **தமிழ்ப்பண்பாடு** என்ற கட்டுரையில்,
(அ) தமிழ் இலக்கியங்களில் பக்திக்கான சான்றுகளையும்
(ஆ) பிறநாடுகளில் பக்தி வளர்ச்சியடைந்தமைக்கான சான்றுகளையும் விளக்குக.

7. **தனிப்பாடல்** பகுதியில் ''**பங்கப் பழனத்துழு முழவர்**..'' என்னும் பாடலில்,
அ. சோழ நாட்டின் வளமும்
ஆ. பெண்ணின் துயரும்
வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

*****